1972 சனவரி 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது மக்களிடமிருந்து வருகிற அது பற்றிய புகார்கள் விசாரிக்கப்பட்டு, கூடுமானவரையில் அந்த இடங்களிலிருந்து அந்தக் கடைகள் அகற்றப்பட்டு வருகின்றன. ஒரு சிலர் நீதிமன்றத்திற்குச் சென்ருல், அதையும் நாம் சந்திக்க வேண்டியவர்களாகத்தான் இருக்கிருேம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அரசாங்கம் தயாரித்து விற்கின்ற சாராயம், குடிக்கின்றவர்கள் எதிர்பார்த்த அளவுக்குப் போதை தருவதாக இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, அவர்கள் விருப்பத்திற்குத் தக்கபடி போதையைக் கூட்டி தயாரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் சார்பாகச் சொல்லப்பட்ட இந்தக் கோரிக்கை உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும். ஆனல் ஒரு திருத்தம். ' அரசாங்கம் தயாரித்து விற்கின்ற சாராயம் ' என்பது சரியல்ல. அரசாங்கம் சாராயம் எதையும் தயாரித்து விற்கவில்லை.

Sale of liquor

* 65 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to ban the sale of liquor on specific days; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) அவ்வித உத்தேசம் எதுவும் இப்போது இல்லை.

திரு. என். டென்னிஸ் : ஷாப் அஸிஸ்டென்ட்ஸ் ஆக்ட் பிரகாரம் கொடுக்கக்கூடிய விடுமுறை நாட்கள் இதற்கும் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி உத்தேசம் இல்லை. ஆனல், இப்பொழுதிருக்கின்ற ஸேல்ஸ் நோட்டிபிகேஷன் படி, குறிப்பிட்ட ஒரு கடை, அல்லது எந்த ஒரு கடையானல், எல்லா வகை டெபோக்களையும் குறிப்பிடுகிற கிழமைகளில் நிறுத்தும்படியாக ஆணையாளர் ஆணையிடலாம் என்று இருக்கிறது. தேர்தல் நடைபெறுகிற நேரத்தில் அந்தக் கடைகள் மூடப்பட வேண்டும் என்று உத்திரவிடுவதற்கு அந்த நிபந்தனை வகை செய்கிறது. அதைப் போலவே, சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளுக்குக் கேடு வரும் வகையில் ஏதாவது கலவரங்கள், அமளி ஏற்படுமானல் அந்த நேரத்திலும் அதுபோன்ற கடைகள் அந்தப் பகுதியில் இருக்கக்கூடாது என்று தடுப்பதற்கு நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.